வலயக்கல்வி அலுவலகம் - திருகோணமலை

தி/தி/திரியாய் தமிழ் மகா வித்தியாலயம்

கொவிட் - 19 விடுமுறை காலச் செயலட்டை - 2020

தரம் :- 05 பாடம் :- தமிழ் ($L_8S_8R_8W_8$) திகதி :-21.07.2020 புள்ளி :- ☐

01. <u>தொடர்பினை அவதானித்துச் சரியான விடையின் கீழ் கோடிடுக.</u>

1. காலைக்கு மாலை என்பது போல பிறப்புக்கு .....

அ) வாழ்க்கை ஆ) இறப்பு இ) முயற்சி

2. தாகத்திற்குத் தண்ணீர் போல நோய்க்கு .....

அ) மருந்து ஆ) விருந்து இ) தண்ணீர்

3. எழுத்தாணிக்கு ஏடு போல வெண்கட்டிக்கு .....

அ) வெண்பலகை ஆ) கற்பலகை இ) கரும்பலகை

4. சித்திரைக்கு வைகாசி போல வியாழனுக்கு .....

அ) நாள் ஆ) வெள்ளி இ) கிழமை

5. துக்கத்திற்கு கறுப்பு என்பது போல சமாதானத்திற்கு .....

அ) சிவப்பு ஆ) பச்சை இ) வெள்ளை

6. கண் - பார்த்தல் என்பது போல தோல் - .....

அ) நுகர்தல் ஆ) உணர்தல் இ) தொடுதல்

7. "அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு." இப்பழமொழிக்குப் பொருத்தமான கருத்தைத் தெரிக.

அ) விடாமுயற்சி பலன் தரும்.

ஆ) பலசாலியும் தோல்வியடையலாம்.

இ) ஒற்றுமையே பலம்.

8. "அனுபவம் ஆபத்து வராமல் தடுக்கும்." இக் கருத்தை உணர்த்தும் பழமொழியைத் தெரிக.

அ) தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்.

ஆ) சூடுகண்ட பூனை அடுப்பங்கரை நாடாது.

இ) ஆனைக்கும் அடி சறுக்கும்.

www.lkedu.lk



zoom

மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

தரம்
01-A/L

Medium

தமிழ்/ English

76667-4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

9. ‘‘சாருமதியின் அண்ணன் பொதுஅறிவு வினாக்களுக்கு விடையளிப்பதில் மிகவும் கெட்டிக்காரன். அவனை எவராலும் தோற்கடிக்க முடியாது. ஒருநாள் சுமதியின் வீட்டிற்கு வந்த நண்பியின் தங்கை கேட்ட பொதுஅறிவுக் கேள்விக்கு சுமதியின் அண்ணனால் விடை கூறமுடியவில்லை.’’ இந்நிகழ்வுக்குப் பொருத்தமான பழமொழியைத் தெரிக.

அ) நிறைகுடம் தளம்பாது.

ஆ) ஆனைக்கும் அடி சறுக்கும்.

இ) வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்.

10. வினோதியின் வீடு குமுதாவின் வீட்டிற்குக் கிழக்கே உள்ளது. குமுதாவின் வீடு சுகந்தியின் வீட்டிற்குக் கிழக்கே உள்ளது. ஆகவே

அ) வினோதியின் வீடு சுகந்தியின் வீட்டிற்குக் கிழக்கே உள்ளது.

ஆ) சுகந்தியின் வீடு வினோதியின் வீட்டிற்கு அண்மையில் உள்ளது.

இ) சுகந்தியின் வீடு குமுதாவின் வீட்டிலும் பார்க்க வினோதியின் வீட்டிற்கு அண்மையில் உள்ளது. (10×1=10)

02. சிறுவர் பத்திரிகை ஒன்றில் வெளியாகிய ‘‘ உலகில் அழிந்துவரும் உயிரினங்கள்’’ தொடர்பான உரைப்பகுதி ஒன்று கீழே தரப்பட்டுள்ளது. அதனை வாசித்து வினாக்களுக்கு விடை தருக.

அழிவின் விளிம்பில் சிட்டுக்குருவிகள்

20 ஆண்டுகளுக்கு முன்னால் நம் வீட்டின் ஜன்னல்களில், மொட்டை மாடிகளில் சுற்றித்திரிந்த அழகிய சிட்டுக்குருவிகள் இனம் இன்று அருகி, அழிவின் விளிம்பில் உள்ளன. கடந்த 25 ஆண்டுகளில் 60 சதவீத சிட்டுக்குருவிகள் அழிந்துவிட்டதாக ஆய்வுகள் கூறுகின்றன. 90 களின் ஆரம்பம் வரை நம் வீட்டைத் தேடி வந்த இந்த அழகிய விருந்தினர்கள் நம்மைச்சுற்றியே கூடுகட்டி வாழ்ந்து வந்தன. “குருவிக்கூட்டை கலைத்தால் பாவம்“ என்ற உயரிய மனோபாவம் நம்மிடையே அப்போது இருந்து வந்தது. அதனால் சிட்டுக்குருவிகள் சூழ்ந்த அதிகாலைப் பொழுதுகள் நம்மிடையே இருந்து வந்தது.

காலம் மாறியது காலனாக செல்பேசிகள் வந்தன. செல்பேசி அலைகள் சிட்டுக்குருவி இனத்தை அழித்தன. போதாதற்கு செயற்கை உரங்கள், பூச்சி மருந்துகள், மரங்களை வெட்டுதல், கட்டிடங்களின் வளர்ச்சி, வெப்பம் அதிகரிப்பது என எல்லாமே சேர்ந்து சிட்டுக்குருவிகளை ஒழித்துவிட்டது. மனிதனுக்கு தீமைகளை விளைவிக்கும் வைரஸ், பாக்டீரியாக்களை நாம் ஒழிக்கவில்லை. மனிதனை மகிழ்வித்த சிட்டுக்குருவிகளை ஒழித்துக்கொண்டிருக்கிறோம். மனிதர்களை நம்பும் எதையுமே நாம் விட்டுவைப்பதில்லையோ? சின்ன சின்ன அசைவுகளால் நம்மை மகிழ்வித்த சிட்டுக்குருவிகள் அழிவின் விளிம்பில் உள்ளன.

2010ஆம் ஆண்டிலிருந்து மார்ச் 20ஆம் நாள் சிட்டுக்குருவிகளின் தினமாக மாறியுள்ளது. இந்த நாளில் மிச்சம் மீதம் இருக்கும் சிட்டுக்குருவிகளை பாதுகாத்து வளர்வதற்கான சூழலை உருவாக்குவோம். ஏன் என்றால்... “விட்டு விடுதலை ஆகவேண்டும் அந்த சிட்டுக்குருவியைப் போல“ பாடல் எப்போதும் இருக்கும், பாரதியும் இருப்பார், ஆனால் சிட்டுக்குருவிகளை எங்கே போய்த்தேடுவது?

www.ikedu.lk

1. அழிவின் விளிம்பில் உள்ள உயிரினம் எது?

   .....

2. மனிதனை மகிழ்வித்த உயிரினம் எது?

   .....

3. காலனாக மாறியது எது?

   .....

4. கடந்த 25 ஆண்டுகளில் எத்தனை சதவீதமான சிட்டுக்குருவிகள்அழிந்து விட்டதாக ஆய்வுகள் கூறுகின்றன?

   .....

5. சிட்டுக்குருவிகள் தினம் எப்போது?

   .....

(5×1=5)

03. <u>"நான் சென்ற கல்விச்சுற்றுலா" எனும் தலைப்பில் ஐந்து வாக்கியங்கள் கருத்துப் புலப்பட எழுதுக.</u>

1. .....

   .....

2. .....

   .....

3. .....

   .....

4. .....

   .....

5. .....

   .....

(5×1=5)

www.lkedu.lk

வலயக்கல்வி அலுவலகம் - திருகோணமலை

தி/தி/திரியாய் தமிழ் மகா வித்தியாலயம்

கொவிட் - 19 விடுமுறை காலச் செயலட்டை - 2020

தரம் :- 05 பாடம் :- கணிதம் (வகுத்தல்-3) திகதி :-21.07.2020 புள்ளி :- ☐

01. <u>சரியான விடையின் கீழ் கோடிடுக.</u>

1. 75 ÷ 3 = ?

அ) 25 ஆ) 35 இ) 15

2. 76 ÷ 4 = ?

அ) 15 ஆ) 18 இ) 19

3. 108 ÷ 3 = ?

அ) 25 ஆ) 36 இ) 32

4. ? ÷ 4 = 42

அ) 102 ஆ) 158 இ) 168

5. 222 ÷ ? = 74

அ) 4 ஆ) 3 இ) 2 (5×1=5)

02. <u>வகுக்குக.</u>

1) $2\overline{)560}$ 2) $3\overline{)690}$ 3) $3\overline{)408}$

4) $4\overline{)736}$ 5) $4\overline{)620}$

(5×1=5)

www.lkedu.lk

03. <u>வெற்றுக்கூட்டை நிரப்புக.</u>

1) 248 ÷ 2 = ☐

2) 465 ÷ 3 = ☐

3) 798 ÷ 3 = ☐

4) 872 ÷ 4 = ☐

5) 696 ÷ 4 = ☐

(5×1=5)

04. <u>விடை எழுதுக.</u>

1. கண்காட்சி ஒன்றிற்காக 164 ஆரம்பப்பிரிவு மாணவர்கள் சமமான இரு குழுக்களாகப் பிரிக்கப்பட்டனர். ஒரு குழுவிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கை யாது?

   .....

2. 600 ***m*** நீளமுள்ள கம்பி ஒன்று நான்கு மீற்றர் துண்டுகளாக வெட்டினால் பெறப்படும் துண்டுகளின் எண்ணிக்கை யாது?

   .....

3. ஒருவருக்கு மூன்று மாம்பழங்கள் வீதம் 345 மாம்பழங்களை எத்தனை பேருக்கு பகிர்ந்தளிக்கலாம்?

   .....

4. 16 ***ℓ*** 800 ***mℓ*** அளவு நீர் நான்கு பெரிய பாத்திரங்களில் ஊற்றப்பட்டன. எனில் ஒரு பாத்திரத்தில் உள்ள நீரின் அளவு யாது?

   .....

5. ஒரு களஞ்சியத்தில் இருந்த 12 ***kg*** 600 ***g*** பருப்பை 3 பேருக்கு சம அளவில் வழங்கினால் ஒருவருக்கு கிடைக்கும் பருப்பின் நிறை யாது?

   .....

(5×1=5)

www.lkedu.lk

வலயக்கல்வி அலுவலகம் - திருகோணமலை

தி/தி/திரியாய் தமிழ் மகா வித்தியாலயம்

கொவிட் - 19 விடுமுறை காலச் செயலட்டை - 2020

தரம் :- 05 பாடம் :- சுற்றாடல் திகதி:-21.07.2020 புள்ளி :-

01. சரியான விடையின் கீழ் கோடிடுக.

1. மற்றவர்களுடன் உரையாடும் போது கவனிக்க வேண்டிய விடயங்களில் ஒன்று?
   அ) உரத்த குரலில் பேசுதல்.
   ஆ) மென்மையான குரலில் பேசுதல்.
   இ) மனம் புண்படும் வகையில் பேசுதல்.
2. பிறருக்கு உதவி செய்யக்கூடிய சந்தர்ப்பங்களில் ஒன்று?
   அ) கண்பார்வையற்ற ஒருவருக்கு பாதையைக் கடக்க உதவி செய்தல்.
   ஆ) தர்மம் கேட்டு வருபவரை அலட்சியம் செய்தல்.
   இ) கீழே விழுந்த நண்பனைப் பார்த்துச் சிரித்தல்.
3. மூர்க்கத்தனமான நடத்தைகளில் ஒன்றல்லாதது?
   அ) பெரியோர்களிடம் பண்பாகப் பேசுதல்.
   ஆ) நண்பனோடு சண்டை பிடித்தல்.
   இ) மற்றவர்களைப் பற்றிக் குறை கூறுதல்.
4. நண்பர்களுடன் சண்டை சச்சரவு ஏற்படுவதற்கான காரணமாக அமையாதது?
   அ) கோபத்தை அடக்கத் தெரியாமை.
   ஆ) நண்பனோடு வாய்க்கு வாய் கதைத்தல்.
   இ) நண்பனைப் புரிந்து கூட்டுணர்வுடன் நடத்தல்.
5. இலங்கைக்கு மிக அருகிலுள்ள தீவு எது?
   அ) கிறீன்லாந்து தீவு ஆ) மாலை தீவு இ) காக்கை தீவு
6. இலங்கையின் மிக உயரமான நீர்வீழ்ச்சி எது?
   அ) பம்பரகந்த ஆ) துன்கிந்த இ) விக்டோரியா
7. இலங்கை எந்தச் சமுத்திரத்தின் மத்தியில் உள்ளது?
   அ) பசுபிக் சமுத்திரம் ஆ) அந்தாட்டிக் சமுத்திரம் இ) இந்து சமுத்திரம்
8. இலங்கையிலுள்ள மலைக்குன்றுகளில் ஒன்று?
   அ) சிவனொளிபாதமலை ஆ) சிகிரியா இ) இமயமலை
9. தேசப்படத்தில் நீலநிறத்தில் குறித்துக் காட்டப்படும் தரைத்தோற்ற அம்சம் எது?
   அ) மலை ஆ) சரணாலயம் இ) நதி
10. மண்ணரிப்பை ஏற்படுத்தும் இயற்கைக் காரணிகளுள் ஒன்று?
    அ) வடிகாலமைப்புச்செயற்பாடு ஆ) மண்அகழ்தல் இ) மழை

www.ikedu.lk

11. வளமான மண்ணின் இயல்புகளில் ஒன்று?

அ) வளியூட்டம் குறைவு.

ஆ) வெளுறிய நிறமுடையது.

இ) மண்புழு, நுண்ணங்கிகள் காணப்படும்.

12. மேட்டுநிலங்களில் மண்ணைப் பாதுகாக்கும் வழிகளில் ஒன்று?

அ) களைகளை அழித்தல்.

ஆ) மூடுபயிர் வளர்த்தல்.

இ) நிலத்தை பண்படுத்தல்.

13.  இவ் உடுத்தொகுதி யாது?

அ) சிம்மம் ஆ) விருட்சிகம் இ) ஓராயன்

14. காற்றின் வேகத்தை அளவிடும் கருவி எது?

அ) காற்றுத்திசைக்காட்டி ஆ) காற்றுக்கிண்ணமானி இ) மழைமானி

15. கைத்தொழில் ரீதியில் காற்று பயன்படும் சந்தர்ப்பங்களில் ஒன்று?

அ) காற்று வலுமின் உற்பத்தி.

ஆ) வியர்வையை அகற்றல்.

இ) ஈரத்துணியை உலர்த்துதல்.

16. சுத்தமாக இருக்கப் பின்பற்றக்கூடிய நடத்தைகளில் ஒன்றல்லாதது?

அ) வாரம் ஒருதடவை நகங்களை வெட்டுதல்.

ஆ) உணவு உட்கொண்டபின் பாத்திரங்களை கழுவாதிருத்தல்.

இ) இரவில் நித்திரைக்குச் செல்ல முன் பல் துலக்குதல்.

17. சர்வதேச கைகழுவும் தினம் எப்போது?

அ) ஒக்டோபர் 15 ஆ) ஒக்டோபர் 10 இ) செப்டம்பர் 15


18. பின்வருவனவற்றுள் தொற்றுநோய் அல்லாதது?

அ) நீரிழிவு ஆ) கொரோனா இ) சின்னம்மை

19. ஊசித்துளைக்கமரா மூலம் தோன்றும் விம்பத்தின் இயல்பு?

அ) உருப்பெருத்தது ஆ) உருச்சிறுத்தது இ) நிமிர்ந்த விம்பம்

20. இவ் உபகரணம் தயாரிக்கத் தேவையான பொருட்களில் ஒன்று?



அ) நிறக் கடதாசி

ஆ) அட்டைத்தாள்

இ) வெண்ணிற ரிசுத்தாள்

(20×1=20)

www.lkedu.lk

Zonal Education Office - Trincomalee


T/T/Thiriyai Tamil Maha Vidhyalayam

COVID – 19 Holiday Worksheet - 2020

Grade: - 05 Subject:-English Date:-21.07.2020 Marks:-

01. Fill in the blanks.

Hospital, School, Post office, Paddy field, Police station

1. 

I work in .....

2. 
I work in .....

3. 
I work in .....

4. 
I work in .....

5. 
I work in .....

6. 
I work in .....

(6×1=6)

02. Look and underline the correct word.

1. 
Jump Drink Run

2. 
Write Jump Eat

3. 
Eat Drink Sit

www.lkedu.lk

4.  Sweep Run Draw

5.  Jump Eat Write

(5×1=5)

03. Fill in the blanks with correct word.

rice and curry/ cake/ Watalappan/ tree/ books

1. I cut a…….. in my birthday.
2. Ravi donated …….. to the library.
3. My mother cooked…… for lunch.
4. Mala planted a mango…….. in the garden.
5. ……..is a wonderful festival food. (5×1=5)

04. Rearrange the words to make meaningful sentences.

1. trees / Let's / plant

……..

2. trees / love / We

……..

3. Let's / trees / protect

……

4. is / my / garden / This

…… (4×1=4)

www.lkedu.lk

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

வலயக்கல்வி அலுவலகம் - திருகோணமலை

தி/தி/திரியாய் தமிழ் மகா வித்தியாலயம்

கொவிட் - 19 விடுமுறை காலச் செயலட்டை -2020

தரம் :- 05 பாடம் :- சிங்களம் திகதி :-21.07.2020 புள்ளி :-

01. இணையுங்கள்.

1.	விளக்கு	சருங்கலய
2.	மாம்பழம்	உ_தெல்ல
3.	குரங்கு	பஹண
4.	மண்வெட்டி	வந்துரா
5.	பட்டம்	அம்ப (5×1=5)

02. சரியான விடையின் கீழ் கோடிடுங்கள்.

1. .....தென்ன (வத்துர / அஹச)
2. .....பனின்ன (உ_ட / கன்ன)
3. கேம.....(தென்ன / கன்ன)
4. .....பொன்ன (தே / பத்)
5. .....யன்ன (பாசல / பென்சல) (5×1=5)

03. இடைவெளிக்குப் பொருத்தமான வினைச்சொல்லை எழுதுங்கள்.

(கியா / ஆவா / கரனவா / யமு / கஹனவா)

1. மம பாடம் .....
2. பஸ் எக்க .....
3. அய்யா கடேட்ட .....
4. அப்பி பாசலட்ட .....
5. சீனுவ ..... (5×1=5)

04. தமிழ்ச் சொற்களுக்குரிய சிங்களப் பதத்தை எழுதுங்கள்.

1. விளையாட்டு மைதானம் .....
2. பல்லி .....
3. மலசலகூடம் .....
4. வியாழக்கிழமை .....
5. பழங்கள் ..... (5×1=5)

www.lkedu.lk